# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.45/2024 நாள் : 11.06.2024**

**இன்று (11.06.2024) மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் திரு. எம். வெங்கடேசன் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.**

இன்று (11.06.2024) மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் திரு. எம். வெங்கடேசன் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் அவர்கள் பேசியதாவது:-**

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7–ன்படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டத்தின் பிரிவு 9-ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 2 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இரண்டாவது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 5 லட்சம்

ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனியார் அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள், தனியார் தங்கும் விடுதிகள், உணவகங்கள், தனியார் மருத்துவமனைகள், தனியார் குடியிருப்புகள் மற்றும் தனியார் வணிக வளாகங்களில் உரிய அனுமதி மற்றும் உரிய பாதுகாப்பு உபகரணங்களின்றி கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொண்டால் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்பமை உச்சநீதிமன்றம் கழிவுநீர் அகற்றும் பணிகளில் மனிதர்களை ஈடுபடுத்தக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவையும் மீறி யாராவது மனிதர்களைக் கொண்டு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டால் பொதுமக்கள் உடனடியாக **"சஃபாய் மித்ரா சுரக்க்ஷா சேலஞ்ச்"** திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட கட்டணமில்லா தேசிய உதவி எண்.14420-ஐ தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய களப்பணியாளர்களின் மறுவாழ்வு நலன் குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகள், செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்ட உதவிகள் குறித்தும், பணி பாதுகாப்பு உபகரணங்கள் குறித்தும் சென்னைக் குடிநீர் வாரியம் உரிய இடைவெளியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வழங்கிட வேண்டும். அனைத்து பணியாளர்களையும் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.மி.ஜெய்கர் ஜேசுதாஸ், பொது மேலாளர் திரு.இரா.இராஜகிருபாகரன், தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.சிவமுருகன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்